மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மாரிச்செட்டியார் பொறுப்புக்கழகம் தற்போது குமாரபாளையத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு, மேல்நிலை நீர்த் தொட்டி அடங்கிய 18 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று, பொது அறை ஒன்று, சுகாதார அறை ஒன்று ஆகியவை அடங்கிய ஒரு மாடிக்கட்டடத்தை நன்கொடையாக வழங்கியிருக்கிறது. அதன் மொத்த மதிப்பீடு 2.50 லட்சம் ரூபாய்.

Sale of Drugs

* 11. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether a number of Drug Stores owners were prosecuted for selling Drugs at inflated prices in Chintadripet in Madras in January 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 1973 ஜனவரி மாதத்தில் சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்த இரு மருந்து வியாபாரிகள் மீது வழக்கு தொடரப்பட்டது.

(இ) (1) சாந்தி மெடிக்கல் ஸ்டோர்ஸ், சென்னை-2.

(2) மாடர்ன் டிரக் ஸ்டோர்ஸ், சென்னை-2.

THIRU N. DENNIS : Sir, whether the Government would consider the cancellation of licences of such black-marketeers?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருந்து விற்பனையில் பல்வேறு வகைகளில் தவறுகள் ஏற்படுகின்றன. நிர்ணயித்த விலைக்கு அதிகமாக விற்பனை செய்வது ஒரு தவறு. அதற்கு நீதிமன்றங்கள் மூலமாகத்தான் தண்டனை வழங்குகிற முறை இருக்கிறது. இன்னொரு முறை மருந்தின் தன்மையை பாதிக்கும் அளவில் அதன் தரத்தைக் குறைத்தல், கலப்படம் செய்தல், அதனால் உயிருக்கே சில நேரங்களில் தீங்கு ஏற்படுதல் ஆகும். அப்படிப்பட்டத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடைய லைசென்சை நிறுத்திவிடலாம் என்ற முடிவு எடுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் அவர்கள் அதிக விலைக்கு மருந்தை விற்றார்கள் என்பதற்காக வழக்குத் தொடரப்பட்டு, அது முடிவு பெறக்கூடிய நாளில் அந்த நாள்

1973 ஆகஸ்ட் 4]

முழுவதும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, 300 ரூபாய் அபராதமும் போடப்பட்டிருக்கிறது. 'ப்ரொபேஷன் ஆஃப் அஃபென்டர்ஸ் ஆக்ட்'படி அவர்கள் தண்டனை பெற்று விடுதலை பெற்றிருக்கிறார்கள். இப்படி கோர்ட்டிலே அவர்களுக்கு தீர்ப்பு வழங்கியிருப்பதால், இனிமேல் அவர்களுடைய தவறான போக்கு மாறும் என்று நம்பப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்வதையும், கலப்படம் செய்வதையும் கண்காணித்து துரித நடவடிக்கை எடுக்க அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவ்வப்போது 'டிரக் இன்ஸ்பெக்டர்கள்' மருந்து விற்பனை செய்யும் கடைகளைத் திடீரென்று சோதனை செய்து, அம்மாதிரியான தவறுகள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதை அவர்கள் விற்பனை செய்திருக்கின்ற மருந்துப் பட்டியல்களைப் பார்த்துக் கண்டுபிடிக்கிறார்கள். தினந்தோறும் இம்மாதிரியான சோதனைகள் நடைபெற்றால் அதிலிருந்து தப்பிவிடுவார்கள் என்பதால் அவர்களுக்குத் தெரியாமல் திடீரென்று போய் 'செக்' பண்ணும் முறை இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், டிரக் இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால், அவர்கள் எல்லா இடங்களுக்கும் காலாகாலங்களில் சென்று செக் பண்ண முடியாததால பல இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அகில இந்தியாவிலே கூட— மத்திய அரசு கூட இந்தப் பிரச்சினையில் நீண்டகாலமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகு தமிழக அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் பேசும் போது அவரவர் இருக்கையில் இருந்து பேச வேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இப்போது அவர்களுடைய இருக்கையில் இல்லை. இடம் மாறியிருக்கிறார்கள்.

[1973 ஆகஸ்ட் 4

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் என்னுடைய இடத்தில் தான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உங்கள் இடம் இல்லை. உங்கள் இடம் உறுப்பினர்கள் திரு. அழகர்சாமி, சௌடி சுந்தர பாரதி இவர்களுக்கு மத்தியில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் இங்கே இருப்பது வசதி யாக இருக்கிறது. நான் ஒரு பெண் உறுப்பினர் என்ற முறையில் இந்த இடத்தை எனக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொள் கிறேன்.

Sir may I make a request to the Chair? Because I happen to be a Lady Member, kindly transfer my seat to the corner so that it may be convenient to other hon. Members also.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, சில மருந்துகள் அதிக விலைக்கு விற்று வருகின்ற காரணத்தினால் இந்த மருந்துகளின் விலைப் பட்டியலை அந்தந்த மருந்துக் கடை களில் போட்டுவைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால் அதைப் பார்த்து மக்கள் வாங்கிக்கொள்வதற்கு வசதி ஏற்படும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அதைப் பரிசீலித்து, நல்ல முறையாக இருந்தால் அதைச் செயல்படுத்த இலாகாவினரைக் கேட்டுக்கொள்ளலாம்.

Prevention of students from becoming drug addicts

* 12. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to prevent the students becoming drug addicts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.